**சார்பு நீதிமன்றம், நெய்வேலி**

**MCOP.No. 98/2023**

பெயர் : திரு. பாபு (ம.சா.2)

தந்தை பெயர் : திரு. தெய்வசிகாமணி தொழில் : லாரி ஓட்டுநர்

கிராமம் : வழுதலம்பட்டு, குள்ளஞ்சாவடி

தாலுக்கா : குறிஞ்சிப்பாடி வயது : 54

தேதி : 08.07.2026.

**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08-ம் நாளாகிய இன்று சாட்சியாக ம.சா.2 இன் வாக்குமூலம் (1873-ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திரு.P.முருகன், பி.ஏ., எல்.எல்.பி., சார்பு நீதிபதியாகிய என்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை:-**

நான் இம்மனுவில் 3 ஆம் நபர் மற்றும் ம.சா.2 ஆவேன், எனது தரப்பு முதன்மை சாட்சியத்திற்கு பதிலாக சத்திய பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து அந்த சங்கதிகளை நான் புரிந்துகொண்டு சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்திருக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு சாட்சியமளிக்க அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. நான் சாட்சியம் அளிப்பதற்கு எவ்வாறு நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் மனுதாரர் அழைத்ததன் பேரில் வந்தேன். கடந்த 05.04.2023 ஆம் தேதி

பங்குனி உத்தர நாள் அன்று கருமாச்சி பாளையம் என்ற இடத்தில் புத்துமாரியம்மன் கோயில் அருகே மனுதாரர் ரோட்டு ஓரமாக மண் ரோட்டில் நின்ற போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் அஜாக்கிரதையாகவும் ஓடி வந்து மனுதாரர் மீது மோதி விட்டார். விபத்து சமயத்தில் நான் அதே இடத்தில் காவடி எடுப்பதற்காக நின்றிருந்தேன் மேற்படி விபத்து நான் நேரில் பார்த்தேன்.

2) விபத்திற்கு முன்பாக மனுதாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் விபத்து குறித்து புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்க சென்றபோது உடன் சென்றேன் நான் தனியாக புகார் கொடுக்கவில்லை. விபத்து நடந்த நேரத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் அந்த நேரத்தில் அதிகமாக இல்லை.

**3)** விபத்து சமயத்தில் கூட்டமாக இருந்தது என்றும் இருசக்கர வாகன ஓட்டுநர் மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும் மனுதாரர் தான் வாகனம் வருவதை கவனிக்காமல் அவராக வாகனத்தின் மீது விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை -இல்லை**

(ஒப்பம்/-திரு.P.முருகன், பி.ஏ., எல்.எல்.பி.,)

சார்பு நீதிபதி,

நெய்வேலி